# நிதிப் பாதுகாப்பிற்கான படிகள்

**பாதுகாப்பு:** இந்தப் படிகளில் சில சாத்தியமில்லாமல் இருக்கலாம். நீங்கள் பாதுகாப்பாக உணரும் படிகளை மட்டும் எடுங்கள். அவசர காலத்தில் மூன்று பூச்சியங்கள் (000) என்ற எண்ணை அழையுங்கள்.

துஷ்பிரயோகம் செய்யும் வாழ்க்கைத்துணையை விட்டுப் பிரிவது பற்றி நீங்கள் யோசித்தால், அத்துடன் நிதி ரீதியான சுதந்திரத்தை நிலைநாட்ட விரும்பினால், நீங்கள் முதலில் எடுக்க வேண்டிய சில படிகள் இங்கே உள்ளன.

## 1 இலவசமான, தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்கு ஒன்றை உருவாக்கவும்

தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியை வைத்திருப்பது, பல நிறுவனங்களுடன் அமைதியான முறையில் தொடர்புகொள்வதற்கான சிறந்த வழியாகும். நீங்கள் இணையவழியாக வங்கிக் கணக்கு ஒன்றை அமைக்க விரும்பினாலும் உங்களுக்கு மின்னஞ்சல் முகவரி தேவைப்படும், எனவே உங்கள் வாழ்க்கைத்துணைக்குத் தெரியாத ஒரு மின்னஞ்சலை வைத்திருப்பது முக்கியம். உங்கள் புதிய மின்னஞ்சல் முகவரி கண்டறியப்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கும் வகையில், உங்கள் வாழ்க்கைத்துணை அணுகாத சாதனத்தில் உங்கள் புதிய கணக்கை அமைக்கவும், எடுத்துக்காட்டாக, நண்பரின் தொலைபேசி அல்லது கணினியில் அமைக்கவும். ProtonMail: https://protonmail.com/ போன்ற பாதுகாப்பான மற்றும் மறைகுறியாக்கப்பட்ட ஒரு இலவச மின்னஞ்சல் வழங்குநரைக் கருத்தில் கொள்ளுங்கள்.

## 2 முக்கிய ஆவணங்களை ஒன்றுதிரட்டவும்

கடவுச்சீட்டுகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்கள் போன்ற முக்கியமான ஆவணங்களைப் பாதுகாக்கவும் (அவ்வாறு செய்வது பாதுகாப்பானது என்றால்) அல்லது இந்த ஆவணங்களின் நகல்களை எடுத்து வைத்துக் கொள்ளவும். இலத்திரனியல் (டிஜிட்டல்) புகைப்படங்கள் அல்லது நகல்களை உங்கள் புதிய, தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம், அல்லது Google Drive போன்ற இலவச, இணையவழி சேமிப்பகத்தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சேமித்து வைக்கலாம். இல்லாவிட்டால், நீங்கள் நம்பும் நபரிடம் ஆவணங்களைப் பாதுகாப்பாகக் கொடுத்துவைக்கலாம்.

* *நகல் எடுக்கப்படவேண்டிய ஆவணங்களின் விரிவான சரிபார்ப்புப் பட்டியலுக்கு, கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.*

## 3 உங்கள் பெயரில் மட்டும் வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்கவும்

உங்கள் வாழ்க்கைத்துணையை விட்டு நீங்கள் பிரிந்து சென்றால், உங்கள் வாழ்க்கைத்துணைக்குத் தெரியாத மற்றும் அவரால் அணுக முடியாத வங்கிக் கணக்கொன்றை வைத்திருப்பது முக்கியமானதாகும். உங்கள் ஊதியம் அல்லது கொடுப்பனவுகள் இந்தக் கணக்கிற்குச் செலுத்தப்படும். புதிய வங்கிக் கணக்கொன்றைத் தொடங்க, நீங்கள் இரண்டு வகையான அடையாள அட்டைகள், ஒரு பாதுகாப்பான அஞ்சல் முகவரி, ஒரு மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கைத்துணைக்கு தற்செயலாகத் தெரிவிக்கப்படும் அபாயத்தைக் குறைக்க, நீங்கள் ஏற்கனவே வாடிக்கையாளராக இல்லாத இடத்தில் கணக்கொன்றைத் திறக்குமாறு பரிந்துரைக்கிறோம்.

**** வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்குதல்**

- நீங்கள் ஆஸ்திரேலிய குடியிருப்பாளராக இல்லாவிட்டால், உங்கள் வெளிநாட்டு வரி வதிவிடத்தைத் தெருவிக்கவேண்டும் மற்றும் உங்கள் வரி அடையாள எண் அல்லது அதற்கு இணையானதை வழங்க வேண்டும்.
- உங்கள் அடையாள ஆவணங்களை நீங்கள் வைத்திருப்பதிலிருந்து உங்களை உங்கள் வாழ்க்கைத்துணை தடுத்திருந்தால், உங்களை அடையாளம் காண மாற்று முறைகளை வங்கிகள் பயன்படுத்தலாம். இதற்கு நீங்கள் நேரில் அல்லது தொலைபேசி ஊடாக ஒரு கணக்கைத் தொடங்க வேண்டியிருக்கும்.
- பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பான முகவரி ஒன்று உங்களிடம் இல்லையென்றால், விருப்பத்தெரிவுகளைப் பற்றி வங்கியிடம் நீங்கள் பேச வேண்டியிருக்கும். நீங்கள் அனுபவிக்கும் குடும்ப வன்முறை மற்றும் பொருளாதார துஷ்பிரயோகத்தைப் பற்றிப் பேசக்கூடிய சிறப்புக் குழு ஒன்று வங்கியில் இருக்கிறதா என்று கேளுங்கள்.

# நிதிப் பாதுகாப்பிற்கான படிகள்

4

### கொஞ்சப் பணத்தை சேமிக்கவும்

முடிந்தால், உங்கள் புதிய வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்யுங்கள். உங்களால் வங்கிக் கணக்கொன்றைத் தொடங்க முடியாவிட்டால், உங்களுக்கான பணத்தில் கொஞ்சத்தை கவனித்துக் கொள்ள ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் தயாராக இருக்கிறாரா என்று பாருங்கள். குடும்ப வன்முறை காரணமாக உங்கள் வீட்டை விட்டு நீங்கள் வெளியேறினால், Centerlink-இல் இருந்து பெறப்படும் ஒரு நெருக்கடிக் கொடுப்பனவிற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்: https://www.servicesaustralia.gov.au/individuals/centrelink. வெளியேறிய 7 நாட்களுக்குள் இது கோரப்பட வேண்டும். Centerlink-ஐ 132 850-இல் அழைக்கவும் அல்லது Centerlink-உடன் ஆங்கிலம் அல்லாத வேறு மொழியில் பேச விரும்பினால், 131 202-ஐ அழைக்கவும்.

### ஆதரவுதவியைப் பெறுக

5

துஷ்பிரயோகம் செய்யும் வாழ்க்கைத்துணையை விட்டுப் பிரிந்து செல்வதை நீங்கள் பரிசீலிக்கிறீர்கள் என்றால், உங்கள் அடுத்த படிகளைத் திட்டமிட உங்களுக்கு உதவக்கூடிய அமைப்புகள் உள்ளன. பொருளாதார துஷ்பிரயோகத்திலிருந்து தப்பித்து, மீண்டும் உங்களைக் கட்டியெழுப்ப உதவுவதற்குப் பலதரப்பட்ட ஆதரவுதவிகள் உள்ளன. மேலும் தகவலுக்கு எங்கள் நிதிப் பாதுகாப்பு இணையதளத்தைப் பார்வையிடவும்: https://financialsafety.org.au

உங்கள் விருப்பத்தெரிவுகளைப் பற்றி ஒருவரிடம் பேச, தேசிய வீட்டு மற்றும் குடும்ப வன்முறை உதவி இணைப்பை 1800RESPECT (1800 737 732) ஊடாக அழைக்கவும். 1800RESPECT-இல் உள்ள ஒருவருடன் பேசுவதற்கு மொழிபெயர்ந்துரைப்பாளரைப் பயன்படுத்த விரும்பினால், 131 450 என்ற எண்ணில் Translating and Interpreting Service எனும் மொழிபெயர்ப்புச் சேவையை அழைக்கவும்.

## அடுத்தகட்டப் படிகள்

துஷ்பிரயோகம் செய்யும் வாழ்க்கைத்துணையை விட்டுப் பிரிந்து செல்ல நீங்கள் முடிவு செய்தால், உங்கள் பொருளாதாரப் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் நீங்கள் எடுக்கக்கூடிய சில படிகள் உள்ளன.

6

### பணத்தைப் பரிமாற்றம் செய்யவும்

உங்களின் ஒரே வருமானம் கூட்டுக் கணக்கு ஒன்றிலிருந்துதான் வருகிறது என்றால், உங்களது அடுத்த படிகளைப் பாதுகாப்பாக எடுத்துவைக்க உங்களுக்கு (மற்றும் உங்கள் குழந்தைகளுக்கு) போதுமான பணத்தைப் பரிமாற்றம் செய்யவும். உங்களிடம் ஊதிய வேலை இல்லை மற்றும் தற்போது Centrelink கொடுப்பனவுகள் எதுவும் பெறப்படவில்லை எனில், நீங்கள் Centrelink கொடுப்பனவுகளைப் பெற 13 வாரங்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கும். கொடுப்பனவுக்கான உங்கள் தகுதியைப் பாதிக்கும் சொத்துகள் உங்களிடம் மற்றும்/அல்லது உங்கள் வாழ்க்கைத்துணையிடம் இருந்தால், Centrelink கொடுப்பனவுக்கான அதிகபட்ச காத்திருப்பு நேரம் இதுவாகும். உங்கள் வாழ்க்கைத்துணைதான் சொத்துக்களைக் கட்டுப்படுத்துகிறார் என்றாலும், உங்களுக்கு அவற்றை அணுகும் வசதி இல்லாவிட்டாலும், சொத்துச் சோதனை மேற்கொள்ளப்படலாம். போதுமான அளவு பாதுகாப்பு இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், Centrelink-இடம் இது பற்றிச் சொல்லுங்கள்.

நீங்கள் சமீபத்தில் குடும்ப வன்முறையிலிருந்து விலகி, பாதுகாப்பாக வாழ்வதற்குத் தேவையான நிதிக்காகச் சிரமப்படுகிறீர்கள் எனில், UnitingCare-இன் வன்முறையிலிருந்து தப்பித்தலுக்கான கொடுப்பனவு (Escaping Violence Payment) மூலம் $5,000 வரை மதிப்புள்ள உதவியைப் பெற நீங்கள் தகுதிபெறக்கூடும். மேலும் அறிக: https://www.unitingvictas.org.au/services/family-services/family-violence-services/escaping-violence-payment/

# நிதிப் பாதுகாப்பிற்கான படிகள்

## 7 கூட்டுக் கணக்குகளை முடக்கவும் அல்லது அவற்றை இயக்குவதற்கான வழிமுறைகளை மாற்றவும்

உங்கள் வங்கியைத் தொடர்புகொண்டு, உங்கள் வாழ்க்கைத்துணையிடமிருந்து நீங்கள் பிரிந்துவிட்டீர்கள் என்று சொல்லுங்கள். உங்களிடம் உள்ள கூட்டுக் கணக்குகளை முடக்குவது பாதுகாப்பானது என்றால், அவ்வாறு செய்யும்படி அவர்களிடம் கேளுங்கள். பணத்தை மேலதிகமாக எடுக்கக்கூடிய வசதி இருந்தால், அதை இடைநிறுத்தி வைக்கும்படி அவர்களிடம் கேளுங்கள், அப்போதுதான் திருப்பிச் செலுத்துமாறு உங்களைக் கேட்கும்படியான கடனை உங்கள் வாழ்க்கைத்துணையால் உருவாக்க முடியாது. உங்கள் பெயரில் வங்கிக் கடனட்டை ஒன்றிருந்தால், அதே கணக்கில் உங்கள் வாழ்க்கைத்துணைக்கும் ஒரு அட்டை இருந்தால், அந்த அட்டையை இரத்துச் செய்யும்படி கேளுங்கள். நீங்கள் கணக்கை இயக்கும் வழிமுறையை 'கையொப்பமிட இருவர் தேவை' என மாற்றலாம், அதாவது பணத்தை கணக்கிலிருந்து எடுப்பதற்கு நீங்கள் இருவரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். மீண்டும் பணத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய வசதியுடன்கூடிய (redraw facility) அடமானக்கடன் (mortgage) உங்களிடம் இருந்தாலும் நீங்கள் இவ்வாறு செய்யலாம்.

குடும்ப வன்முறையின் விளைவாக நீங்கள் பிரிந்திருப்பதை உங்கள் வங்கி அல்லது நிதி நிறுவனத்திடம் கூறுவது உங்களுக்கு சௌகரியமாக இருந்தால், இது உங்களுக்கு உதவுவதற்காக அவர்கள் வைத்திருக்கும் விருப்பத்தெரிவுகளின் அளவை அதிகரிக்கும்.

## 8 புதிய கைபேசி ஒன்றைப் பெறவும்

உங்கள் வாழ்க்கைத்துணை, உங்கள் கைபேசியைப் பின்தொடரவோ, கண்காணிக்கவோ அல்லது அணுகவோ ஏதேனும் வாய்ப்பு இருந்தால், புதிய கைபேசி ஒன்றைப் பெற்று, உங்கள் வாழ்க்கைத்துணை தெரிந்து கொள்ளக்கூடாது என்று நீங்கள் விரும்பும் உரையாடல்களுக்கு இதைப் பயன்படுத்தவும். நீங்கள் ஏற்கனவே வைத்திருக்கும் கைபேசியைப் பயன்படுத்துவதை நிறுத்துவது பாதுகாப்பானது என்று நீங்கள் நினைக்கவில்லை என்றால், மற்ற அழைப்புகளுக்கு அதைத் தொடர்ந்தும் பயன்படுத்தவும். Safe Connections திட்டத்தின் மூலம் இலவச கைபேசி ஒன்றிற்கு நீங்கள் தகுதிபெறக்கூடும்: https://phones.wesnet.org.au/safeconnections/. தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களில் பாதுகாப்பாக இருப்பது பற்றிய தகவலுக்கு, https://techsafety.org.au/resources/ -ஐப் பார்வையிடவும்.

## 9 கடவுச்சொற்களை மாற்றவும் மற்றும் விவரங்களைப் புதுப்பிக்கவும்

உங்கள் வங்கி அட்டைகள், வங்கிக் கணக்குகள், கைபேசிகள், MyGov/Centrelink கணக்கு (மற்றும் குழந்தைகளின் MyGov கணக்குகள்) ஆகியவற்றில் கடவுச்சொற்கள் மற்றும் தனிநபர் அடையாள எண் (PIN) போன்றவற்றை உடனடியாக மாற்றவும். முடிந்தால், இந்தக் கணக்குகளை உங்கள் புதிய மின்னஞ்சல் முகவரிக்கு மாற்றவும்.

உங்கள் முதலாளி, Centrelink, மோட்டார் வாகனப் பதிவகம், சாலைச் சுங்க வழங்குநர்கள், இணைய சேவை, காப்பீட்டு நிறுவனங்கள், சொத்து மேலாளர், பயன்பாடுகள் (மின்சாரம், தண்ணீர்), ஆஸ்திரேலிய வரி அலுவலகம் (ATO), ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையம் போன்ற உங்கள் விவரங்களைப் புதுப்பிக்கவேண்டிய நிறுவனங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்.

## 10 கடனைச் சமாளிக்கவும்

உங்கள் வாழ்க்கைத்துணை, கூட்டுக் கடனை உருவாக்கக்கூடும் என நீங்கள் கவலைப்பட்டால், அல்லது அவர் உங்கள் பெயரில் கடனை உருவாக்கியிருக்கலாம் என நீங்கள் நினைத்தால், உங்கள் பணக்கடன் அறிக்கையின் இலவச நகல் ஒன்றைக் கோரவும். Credit Smart இலிருந்து கடன் அறிக்கையிடுதல் பற்றி மேலும் அறிக: https://www.creditsmart.org.au/. உங்கள் பெயரில் உள்ள கடன்கள் தொடர்பாக உங்களைத் துரத்துகின்ற கடன் வழங்கியவர்களைச் சமாளிக்க நிதி ஆலோசகர் ஒருவரால் உங்களுக்கு உதவ முடியும். இலவசமான, சுயாதீனமான, இரகசிய உதவிக்கு, தேசிய கடன் உதவி இணைப்பை (National Debt Helpline) 1800 007 007 என்ற எண்ணில் அழைக்கவும்.

# ஆவணச் சரிபார்ப்புப் பட்டியல்

## கூடுதல் தகவல்

### * முக்கியமான ஆவணச் சரிபார்ப்புப் பட்டியல்

- ☐ கடவுச்சீட்டு (உங்கள் குழந்தைகளது உட்பட)
- ☐ ஓட்டுநர் உரிமம்
- ☐ திருமணச் சான்றிதழ்
- ☐ பதிவுசெய்யப்பட்ட உறவுச் சான்றிதழ்
- ☐ பிறப்புச் சான்றிதழ் (உங்களது மற்றும் உங்கள் குழந்தைகளது)
- ☐ குடியேற்ற ஆவணங்கள்
- ☐ ஏதேனும் நீதிமன்ற ஆவணங்கள் அல்லது நீதிமன்ற உத்தரவுகள்
- ☐ மெடிக்கேர் (Medicare) அட்டை
- ☐ MyGov கணக்கு/உள்நுழைவு விவரங்கள்
- ☐ ஓய்வூதியக் கணக்கு (superannuation) விவரங்கள் (உங்களுடையது மற்றும் உங்கள் வாழ்க்கைத்துணையினது)
- ☐ வங்கிக் கடனட்டை அறிக்கை(கள்)
- ☐ வங்கி அறிக்கை(கள்)
- ☐ ஏதாவது சொத்துக்குரிய உரிமைப் பத்திரங்கள்
- ☐ அடமானக்கடன் (mortgage) அறிக்கை(கள்)
- ☐ தனிநபர் கடன் அல்லது சீருந்து (கார்) கடன் அறிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள்
- ☐ Centrelink (சேவைகள் ஆஸ்திரேலியா) கடிதத் தொடர்பாடல்கள்
- ☐ பிணைக்கப்பட்ட நிதி ஒப்பந்தம்
- ☐ கடன் சேகரிப்பாளர்கள் அல்லது பிற கடன் வழங்கியவர்களிடமிருந்து பெற்ற கடிதங்கள்
- ☐ ஊதியச் சீட்டுகள்
- ☐ ஆஸ்திரேலிய வரி அலுவலகத்திலிருந்து பெறும் வரி அறிக்கை அல்லது மதிப்பீட்டு அறிவிப்பு

### கூடுதல் ஆவணச் சரிபார்ப்புப் பட்டியல்

- ☐ உயில்
- ☐ வழக்கறிஞரின் அதிகார (Power of Attorney) ஆவணம்
- ☐ நீடித்து வரும் வழக்கறிஞரின் அதிகார (Power of Attorney) ஆவணம்
- ☐ பாதுகாவலர் நிலை
- ☐ மேம்பட்ட பராமரிப்பு உத்தரவு (Advanced Care Directive)
- ☐ காப்பீட்டு ஆவணங்கள்: வீடு, சீருந்து (கார்), ஆரோக்கியம், வருமானப் பாதுகாப்பு, ஆயுள்
- ☐ மின்சாரம், எரிவாயு மற்றும் தண்ணீர் கட்டணச் சிட்டை
- ☐ கைபேசிக் கட்டணச் சிட்டை
- ☐ இணையக் கட்டணச் சிட்டை
- ☐ வீட்டு வாடகை ஒப்பந்தம்
- ☐ மோட்டார் வாகனப் பதிவு
- ☐ நிறுவனப் பதிவு (எந்தவொரு தனிப்பட்ட அல்லது குடும்ப வணிகத்திற்கும் உரியது)